# 18-05-2024 செய்தி

## கோவாக்சின் கரோனா தடுப்பூசி

- இங்கிலாந்தை சேர்ந்த அஸ்ட்ரா ஜெனிகா, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து 'வேக்ஸ்செவ்ரியா' என்ற கரோனா தடுப்பூசியை தயாரித்தது.
- இந்த மருந்தைதான் இந்தியாவில் சீரம் நிறுவனம் கோவிஷீல்டு என்ற பெயரில் தயாரித்தது.
- இது சிலருக்கு மிகவும் அரிதாக ரத்தம் உறைதல் மற்றும் ரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைவு போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இங்கிலாந்து நீதிமன்றத்தில் அஸ்ட்ராஜெனிகா நிறுவனம் சமீபத்தில் ஒப்புக் கொண்டது.
- இதையடுத்து உலகம் முழுவதும் தனது கரோனா தடுப்பூசி மருந்தை திரும்பப்பெறுவதாக அஸ்ட்ராஜெனிகா அறிவித்துள்ளது.
- இந்நிலையில் ஸ்பிரிங்கர் நேச்சர் என்ற இதழில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் ஆய்வு கட்டுரை வெளியாகியுள்ளது.
- அதில் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கரோனா தடுப்பூசி கோவாக்சின் செலுத்திக் கொண்டவர்களில் 30% மேற்பட்டோருக்கு ஓராண்டுக்குப்பின் பலவித உடல்நல பிரச்சினைகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோமி பாக்

- இறைவனின் தோட்டம் என்ற பொருள்படும் சோமி பாக் மணிமண்டபம் ராதாசோமி எனும் சமய மார்க்கத்தைத் தோற்றுவித்த தானி சுவாமிஜி மகராஜ் என்பவருக்கு வடிக்கப்பட்ட பிரம்மாண்டமான கல்லறை மாடமாகும்.
- 1922-ம் ஆண்டில் கட்டப்படத் தொடங்கிய இந்த மணிமண்டபத்தின் கட்டிடப்பணியில் கடந்த 102 ஆண்டுகளில் தலைமுறை தலைமுறையாகப் பலர் ஈடுபட்டுவந்துள்ளனர்.

## காட்டுத் தீ

- காட்டுத்தீ என்பது உத்தரகாண்டுக்கும் அதன் அண்டை மாநிலமான ஹிமாசல பிரதேசத்துக்கும் மட்டுமேயான பிரச்சனை அல்ல.
- கர்நாடகம், தமிழகம், அருணாசல பிரதேசம் உள்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஆங்காங்கே காடுகள் தீப்பிடித்து எரிவதும், வனப்பகுதிகள் எரிந்து சாம்பலாவதும், அதனால் சூழலியலும் பல்லுயிர் பெருக்கமும் பாதிக்கப்படுவதும் மனித இனத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கிறது.
- மே மாதத் தொடக்கத்தில், உத்தரகண்ட் மாநிலத்தின் குமோன் பகுதியில் தொடங்கிய காட்டுத்தீ இன்னும் அடங்கிய பாடில்லை; ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான காடுகள் பாதிக்கப்பட்டு, மாநிலத்தின் தலைநகர் நைனிடால் வரை நெருங்கிவிட்டது.
- மக்கள் வாழும் பல பகுதிகள் காட்டுத்தீயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் 53,483 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஏறத்தாழ 64.7% வனப்பகுதி. அவற்றில் 42% அடர்த்தியான காடுகள்.
- பாதுகாக்கப்பட்ட பகுதி, மாநில அரசின் நிலப்பரப்பில் ஏறத்தாழ 15% என்றால் மொத்த வனப்பரப்பில் 23%.
- உத்தரகாண்டின் இமயமலை வனப்பகுதி சூழலியல் முக்கியத்துவம் பெற்றது. 6 தேசிய பூங்காக்களும், 7 வனவிலங்கு சரணாலங்களும் அமைந்திருக்கின்றன.
- இந்த மாநிலத்தில் உள்ள பனிச்சிகரங்களில் இருந்துதான் கங்கை, யமுனை உள்ளிட்ட பல நதிகள் உருவாகின்றன.
- உத்தரகாண்டின் மலைப்பகுதிகளால் உருவாகும் மழைதான் பனிச்சிகரங்கள் உருவாக உறுதுணையாக இருக்கின்றன.
- காடுகள் எரிந்து அதிலிருந்து வெளிவரும் கரித்துகள்கள் பனிச்சிகரங்களில் படிந்துவிடுகின்றன. அதனால் வெப்பம் அதிகரித்து பனிச்சிகரங்கள் உருகத் தொடங்குகின்றன.
- நீர் ஊற்றுகள் பாதிக்கப்படுதல், பனிச்சரிவுகள் ஏற்படுதல், அதிகரிக்கும் வெப்பம், வனவிலங்குகள் அழிவு, அடைமழை, காட்டுத்தீ உள்ளிட்ட பல்வேறு சூழலியல் பிரச்சினைகள் உருவாகின்றன.

## இந்தியா-ரஷ்யா வர்த்தக முன்னேற்றம்

**இருதரப்பு வர்த்தகம்**

- 2022-23ம் நிதியாண்டில், இந்தியா-ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகம் 4.10 லட்சம் கோடி ரூபாய்.
- இதில் இந்தியாவின் ஏற்றுமதி 26,000 கோடி ரூபாய், ரஷ்யாவிலிருந்து இறக்குமதி 3.84 லட்சம் கோடி ரூபாய்.

**ஏற்றுமதியான பொருட்கள்**

- 2022-23ம் நிதியாண்டில், ரஷ்யாவுக்கு 3,873 பொருட்கள் ஏற்றுமதி ஆசின.
- ரசாயனம், இரும்பு, உருக்கு, கடல் பொருட்கள், காபி கொட்டைகள், மருந்து பொருட்கள் அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**இறக்குமதியான பொருட்கள்**

- 2022-23ம் நிதியாண்டில், ரஷ்யாவிலிருந்து 983 பொருட்கள் இறக்குமதி ஆகின.
- கச்சா எண்ணெய், தாவர எண்ணெய், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள் அதிகளவு இறக்குமதி செய்யப்பட்டன.